بِسْمِ اللّٰہِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *06/03/2026* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**மத்திய கிழக்கு பகுதியில் நடைபெறுகின்ற தற்போதைய போர் சூழலின் பின்னணியில் முஸ்லிம் உம்மத்துக்குப் பொன்னான அறிவுரைகள்**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝١ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝٢ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝٣ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٤ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝٥

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝٦ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝٧

ஓரிறைவன் மீது நம்பிக்கை கொள்வது, அவனை வணங்குவது, அவனது ஓரிறைமையை நிலைநாட்டுவது மற்றும் அதற்காக முயற்சி செய்வது மற்றும் அவனுடைய அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதற்காக முயற்சி செய்வது, பிறகு ஒரே உம்மத்தாகி ஒருவர் மற்றவருடன் சகோதரர்களாக இருப்பது ஆகியவையே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த தூதுச் செய்தியின் நோக்கமாகும். ஆனால், 'நாங்கள் கலிமா கூறுபவர்கள் ஆவோம்' என்று வாதிப்பவர்களாக இருந்தும், இன்று நம்மிடையே ஒருமித்த பிணைப்பு இல்லை. எந்தப் போதனைகளைக் கொண்டிருப்பதாக நாம் வாதம் செய்கின்றோமோ அதற்கு ஏற்ப நம்முடைய செயல்கள் இல்லை. அதன் விளைவு, நாம் முஸ்லிம் உலகின் நிலையை ஆராய்ந்து பார்த்தால் அது மிக மிகக் கவலைக்குரியதாக இருக்கின்றது.

சில இஸ்லாமிய நாடுகளிடம் இயற்கை வளங்களும், அதன் செல்வங்களும் இருக்கின்றனதான்; ஆனால், அவ்வாறு இருந்தும், உலகப் பேராற்றல்களுக்கு முன்னாலும் இவர்களுக்குச் சிறப்பான எந்தத் தகுதியும் இல்லை; மார்க்கத்தின் முன்னேற்றத்திலும் இவர்களுடைய சிறப்பான எந்தப் பங்களிப்பும் இல்லை. இஸ்லாமிய போதனைகள்படி அமல் செய்வதற்கும் அவர்களின் எந்த சிறப்பான முயற்சியும் தென்படவில்லை. அதன் விளைவு முற்றிலும் வெளிப்படையாகத் தெரிகிறது, அந்நியர்கள் இந்த சூழ்நிலையிலிருந்து பயனடைகிறார்கள்.

எனவே, இஸ்லாமியப் பேரினம் என்கிற வகையில் நாம் ஒன்றுபட வேண்டும். மேலும், அதற்காக நாம் முழுமையான முறையில் முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறு நிகழ்ந்தால்தான், நாம் உலகத்தின் தாக்குதல்களிலிருந்து தப்பிக்க முடியும். அப்போதுதான் நம்மால் நமது மதிப்பையும் நிலைநாட்ட முடியும்; இஸ்லாமிய எதிராற்றல்கள் நம்மிடையே பிரிவினை ஏற்படுத்தாமல்

தடுக்கவும் முடியும். அதற்காக நாம், இந்தக் காலத்தில் அல்லாஹ் அதற்காக என்ன ஏற்பாட்டைச் செய்துள்ளான் என்பதைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:* நான் கூறியது போன்று, மிக நீண்ட காலமாக மக்களுக்கு கவனமூட்டி வருகிறேன். எந்த மக்கள் என் பேச்சைக் கேட்டு, 'நீங்கள் உலகம் தொடர்பாக மிகவும் நம்பிக்கையிழந்த கருத்துகளைக் கூறுகின்றீர்கள்; உலகம் அச்சுறுத்தக்கூடிய போரில் மூழ்கும் என்ற எதிர்மறையான கருத்தைக் கொண்டிருக்கிறீர்கள்' என்று கூறி வந்தார்களோ, அதே மக்கள் இன்று, 'சில ஆண்டுகளுக்கு முன்பு எதை நாங்கள் சாத்தியமில்லை என்று எண்ணி வந்தோமோ, இப்பொழுது அதுவே சாத்தியமாகிவிட்டது. போர்கள் தொடங்கிவிட்டன' எனக் கூறத் தொடங்கியுள்ளார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* மேலை நாட்டு வல்லரசுகள் முதலில் இஸ்லாமிய நாடுகளைத் தங்களுக்குள் போரிடச் செய்தன. இப்பொழுது அவர்களுடைய வளங்களைக் கைப்பற்றுவதற்காகத் தொடர்ச்சியாக முயற்சி செய்து வருகின்றன. இந்த தஜ்ஜாலிய வல்லரசுகள் ஒருபோதும் முஸ்லிம்களாகிய நாம் ஒற்றுமையாகவும், ஒருமனப்பட்டும் வாழ்வதைக் காண விரும்புவதில்லை என்பதை முஸ்லிம்கள் புரிய வேண்டும். அவர்களுடைய உண்மையான நோக்கமே, முஸ்லிம்களுக்கு இடையே எப்போதும் குழப்பத்தை விளைவித்துக் கொண்டே இருப்பதுதான்.

அமெரிக்கா பல முஸ்லிம் நாடுகளில் தன்னுடைய படைத்தளங்களை நிறுவி இருக்கின்றது. ஆனால் எதற்காக? அந்த நாடுகளின் பாதுகாப்பிற்காகவா? அந்த அரபு நாடுகளுக்கு யாரால்தான் ஆபத்து இருந்தது!? இந்த வல்லரசுகள் தாமே ஆபத்துகளை உருவாக்கின. பிறகு, 'உங்களுக்கு ஆபத்து இருக்கிறது; எனவே உங்களுடைய பாதுகாப்பிற்காக இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது' என்ற கருத்தியல் இஸ்லாமிய நாடுகளிடம் உருவாக்கப்பட்டது. முஸ்லிம் நாடுகளுக்கு எவர்களால் உண்மையான ஆபத்து இருக்கிறதோ அவர்களுக்கு எதிராகவோ இவர்கள் படைத்தளங்களை ஒருபோதும் பயன்படுத்தவும் மாட்டார்கள்.

ஈரானோ எப்பொழுதுமே இந்த நாடுகளின் கண்களை உறுத்திக் கொண்டே இருந்தது. ஈரான் இஸ்ரேலுக்கு எதிராக மிகக் கடுமையான பாலிசியை (அணுகுமுறையை)க் கொண்டிருந்தது. ஏனைய இஸ்லாமிய நாடுகளுடன் ஈரானுக்குக் கொள்கை வேறுபாடும் இருந்தது. இவ்வனைத்திலிருந்தும் இந்த உலக வல்லரசுகள் பயனடைந்தன. மேலும், அந்தப் பகுதியில் தமது இருப்பை உறுதியாக்கின. அந்தத் தளங்களின் காரணமாகவே அரபு நாடுகள் மீது தாக்குதலுக்கான ஆபத்தோ இருந்ததுதான்; தாக்குதலும் நடந்தது. அந்தத் தாக்குதல்களால் அரபு நாடுகளின்

பொருளாதாரம் அழிந்து போனது. இந்த சூழ்நிலையால் அந்த உலக வல்லரசுகளுக்குத்தான் பலன் ஏற்பட்டது; இனியும் ஏற்படும்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஈராக் போரின் போது, "இப்பொழுது இந்தக் குழப்பம் அதிகரித்துக் கொண்டே செல்லும்" என்று கூறியிருந்தார்கள். அந்தோ! முஸ்லிம் நாடுகள் அதிலிருந்து பாடம் பெற்றிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் மேலும் கூறினார்கள்:* இந்த அமைதியின்மை, அந்த உலகளாவிய வல்லரசுகளாலேயே பரப்பப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் ஏதேனும் சிறப்பான நியதி இருந்தாலே அன்றி, வெளிப்படையாக அது நிற்பதற்கான சாத்தியக்கூறு எதுவும் தென்படவில்லை. எவ்வாறாயினும், அதற்காகவும் அவர்கள் முயற்சி செய்ய வேண்டும். அதற்காக நாம் துஆவும் செய்ய வேண்டும். இந்த அநீதி நாளுக்கு நாள் எந்த வேகத்தில் அதிகரித்துக் கொண்டிருக்கிறதோ, அதை வைத்துப் பார்க்கும்போது, பறந்த அளவில் உலகப் போர் நடக்கப் போவதாகத் தெரிகிறது. மாறாக, சில மேற்கத்திய விமர்சகர்களின் கூற்றுப்படியோ உலகப் போர் துவங்கிவிட்டது. நானும் துவங்கிவிட்டது என்றே கூறுகிறேன். ஆனால் இப்பொழுதும்கூட, முஸ்லிம் உலகம் அறிவுடைமையுடன் செயல்பட்டால், அவர்கள் இப்பொழுதும் தஜ்ஜாலின் குழப்பங்களிலிருந்து பாதுகாப்பாக இருக்க முடியும்.

மத்தியக்கிழக்கில் இப்பொழுது நிகழ்ந்து கொண்டிருக்கும் இந்தப் போரை, அமெரிக்கா ஈரானின் மீது தாக்குதல் நடத்தி துவக்கியது என்று கூறினாலும், ஈரான், 'எங்கள் மீது தாக்குதல் நடத்தினால், அரபு நாடுகளில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீது தாக்குதல் தொடுப்போம்' என்று முன்பே எச்சரித்திருந்தது. பிறகு, அப்படியே நடக்கவும் செய்தது. இவர்கள் ஆட்சி மாற்றம் நிகழும் என்று முழங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால், என்ன கிடைத்தது? காமேனி சாஹிபுக்கோ ஷஹாதத் அந்தஸ்து கிடைத்து விட்டது. அவரது மதிப்பு இன்னும் அதிகரித்துவிட்டது. அவருடைய முழு குடும்பமும் கொல்லப்பட்டது. எனவே, இதனால் ஆட்சி மாற்றம் நிகழ்வதென்ன, அவருடைய சமுதாயம் இன்னும் அதிகம் ஒன்றிணைந்து விட்டது.

மத்திய கிழக்கின் அரபு நாடுகளிடம் தற்காத்துக் கொள்வதற்கான வலிமை இல்லை. அவர்கள் முற்றிலுமாக மேற்கத்திய ஆற்றல்களையே சார்ந்துள்ளார்கள். இப்பொழுது இந்தப் போர் அபாயகரமான நிலையை அடைந்து விட்டது. ஒருபுறம், எண்ணெய்க் கிணறுகள் மூடப்பட்டதனால், அரேபிய ஆற்றல்களுக்கு இழப்பு ஏற்பட்டு வருகிறது; விலைவாசி உயர்கின்றது. அதே வேளையில், அவர்கள் இந்தப் போரில் அமெரிக்காவின் தற்காப்பு வசதியைப் பெறுவதற்கான செலவையும் கொடுக்க வேண்டி வரும். இந்த அனைத்தின் மூலமாகவும், அரபுலகின் பொருளாதாரத்திற்கு மிகப்பெரும் இழப்பு ஏற்படும்.

அமெரிக்க அதிபர் முந்தைய அமெரிக்க அரசாங்கங்களின் பாலிசியையே செயல்படுத்தி வருகிறார். இது ஒன்றும் அவர்களின் இன்றைய பாலிசி அல்ல; மாறாக, ஆண்டாண்டு காலமாக, 'நாம் விரும்பும் பகுதியின் வளங்களைக் கைப்பற்றிக் கொள்ளலாம். பிறகு, இதனால் செய்தோம்; அதனால் செய்தோம் என்று ஏதாவது ஒன்றைக்கூறி அதை நியாயப்படுத்த முயற்சி செய்யலாம்' என்ற இந்தப் பாலிசியே அவர்களிடம் இருந்து வருகிறது. மேலும், அவர்களுடன் கலந்து கொள்ளாத நாட்டை மிரட்டவும், அச்சுறுத்தவும் செய்கிறார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:* ஐரோப்பிய பாராளுமன்றத்தில் ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த அவர்களுடைய பெண் உறுப்பினர் ஒருவர், "அமெரிக்காவின் எந்தப் போரிலும் பெண்களுக்கு விடுதலை கிடைத்ததில்லை" என்று மிகவும் பகிரங்கமாகக் கூறியிருக்கிறார். அவர் ஒரு பெண் ஆவார். பெண்கள் பற்றிய கருத்தை எழுப்பி இருக்கிறார். ஏனென்றால், "நாங்கள் ஈரானிய பெண்களின் விடுதலைக்காக போரிடுகிறோம்" என்ற அமெரிக்கர்களின் வாதமெல்லாம் பொய்யாகும். இதன் மூலமாக ஒருபோதும் ஈரானிய பெண்களுக்கு விடுதலையும் கிடைக்காது; அமெரிக்காவும் ஒருபோதும் பெண்களின் விடுதலைக்காக போர் செய்யததும் இல்லை; அவர்களுக்கு விடுதலை வாங்கித் தருவதில் வெற்றி பெற்றதும் இல்லை. எங்கு நீதியில்லையோ, பிறகு, அங்கு அழிவு ஏற்படுகிறது. இந்த ஆற்றல்கள் நூற்றுக்கணக்கான குழந்தைகளையும், குற்றமற்றவர்களையும் கொன்று விட்டன. குழந்தைகளின் பள்ளிக்கூடத்தின் மீது குண்டு வீசப்படுகிறது! கேட்பார் யாருமில்லை! இது என்ன போர்?

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:* இஸ்லாம் தவ்ஹீதை நிலைநாட்டுவதற்காக வந்தது. அந்த நோக்கத்திற்காகவே முஸ்லிம் நாடுகள் முயற்சி செய்ய வேண்டும்; ஒன்றிணைய வேண்டும். வலிமைபடைத்த இந்த நாடுகளை உங்கள் இறைவனாகக் கருதாதீர்கள். இல்லையென்றால், இந்த நாடுகள் ஒவ்வொன்றாக அனைத்து இஸ்லாமிய நாடுகளையும், அவர்களுடைய வளங்களையும் கைபற்றிக் கொள்வார்கள்.

திருக்குர்ஆன் முஸ்லிம்களுக்கு இந்தத் தெளிவான வழிகாட்டலை வழங்கியுள்ளது: "நம்பிக்கையாளர்களின் இரு பிரிவினர் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டால், அவர்களிடையே இணக்கத்தை ஏற்படுத்துங்கள். பிறகு, சமாதானம் ஆன பிறகு, அவர்களுள் எவரேனும் மற்றவர் மீது தாக்குதல் தொடுத்தால், அவர் அல்லாஹ்வின் கட்டளையின் பக்கம் திரும்பி வரும்வரை, தாக்குதல் தொடுப்பவருக்கு எதிராக அனைவரும் ஒன்று சேர்ந்து போரிடுங்கள். அவர் அல்லாஹ்வின் கட்டளையின் பக்கம் திரும்பி வந்துவிட்டால், அந்த சண்டையிடுபவர்களுக்கிடையே நீதியுடன் சமரசம் செய்து வைத்து விடுங்கள்".

இது எத்தகைய கட்டளை என்றால், இது உலக அமைதிக்கும் அவசியமானதுதான். ஆனால் முஸ்லிம்களுக்கோ, இதன் முக்கியத்துவம் இன்னும் அதிமாக உள்ளது. ஏனென்றால், அல்லாஹ் திருக்குர்ஆனில் இந்த வழிகாட்டலை வழங்கியிருக்கிறான்: இணக்கம் ஏற்படுத்தி வைக்கும்போது, தம்முடைய சொந்தப் பயன்களைப் பார்க்காமல், மூலச் சீக்கல்களுக்கான தீர்வு காண வேண்டும். சீனாவும், மற்ற சில நாடுகளும் இணக்கத்தை ஏற்படுத்த முன்வந்துள்ளன. ஈரான் உற்பட இந்த அரபு நாடுகள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* அந்தோ! முஸ்லிம் உலகம் இதைப் புரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அல்லாஹ் அவர்களுக்கு அறிவை வழங்குவானாக! எவ்வாறாயினும், முஸ்லிம் உலகிற்காகவும், குற்றமற்றவர்களுக்காகவும் குறிப்பாக துஆ செய்வதே நமது வேலையாகும். ரமலான் மாதத்தில், குறிப்பாக, உங்களுடைய சொந்தத் தேவைகளுக்காக மட்டும் துஆக்களின் பக்கம் கவனம் செலுத்தாமல், முஸ்லிம் உம்மத்திற்காகவும் துஆ செய்யுங்கள்.

அல்லாஹ் அவர்களுக்கு அறிவை வழங்குவானாக! அவ்வாறு உலகில், குறிப்பாக முஸ்லிம் உலகில், அமைதி நிலவட்டுமாக. முஸ்லிம்கள் முஸ்லிம்களுடைய தலையை வெட்டுபவர்களாக ஆகாதிருப்பார்களாக. இந்த மக்கள் ஒருவர் மற்றவருடன் சண்டையிட்டு தவறான வழிமுறைகளில் ஒருவர் மற்றவரைக் கொன்று கொண்டிருக்கிறார்களே, இந்த செயலின் மூலமாக அவர்கள் அல்லாஹ்வின் சினத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் இம்மையில் மட்டும் இழப்படைபவர்கள் அல்ல; அதற்கும் மேற்பட்டு, மறுமையிலும் இழப்படைபவர்கள் ஆவார்கள். எனவே, இதன் பக்கம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டிய தேவையுள்ளது. அல்லாஹ் நமக்கு உண்மையான முறையில் துஆக்களையும் செய்ய நல்வாய்ப்பை வழங்குவானாக!

*குத்பாவின் இரண்டாவது பகுதியில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் மர்ஹூம்கள் சிலருடைய நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். மேலும், அவர்களுக்கு ஜனாஸா காயிப் தொழுகை தொழவைப்பேன் என அறிவித்தார்கள்.*

முதல் குறிப்பு, **மதிப்பிற்குரிய சாஹிப்ஸாதீ அமத்துல் ஜமீல் சாஹிபா** அவர்களுடையதாகும். இவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்களின் மிக இளைய மகள் ஆவார்கள். நாஸிர் மஹ்மூத் சியால் சாஹிப் அவர்களின் துணைவியார் ஆவார்கள். ஹஸ்ரத் சௌத்ரீ பத்ஹ் முஹம்மத் சியால் சாஹிப் அவர்களின் மருமகள் ஆவார்கள். ஹஸ்ரத் சய்யிதா மர்யம் பேகம் சாஹிபா, அதாவது, உம்மே தாஹிர் சாஹிபா அவர்களின் மகள் ஆவார்கள்.

இவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்களின் பிள்ளைகளிலும் எல்லாரையும் விட இளையவராவார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி)

அவர்கள் 1955 ஆம் ஆண்டு இவர்களுக்கு நிக்காஹ் நடத்தினார்கள். இவர்களுக்கு நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். மர்ஹூமா ஏழைகளைப் பராமரித்து வரக்கூடியவராக, துஆ செய்யக்கூடியவராக, நல்லியல்பு உள்ள பெண்மணியாக இருந்தார்கள்.

இரண்டாவது குறிப்பு, ஹாலாண்டைச் சேர்ந்த **மதிப்பிற்குரிய டாக்டர் ரஷீத் அஹ்மத் கான் சாஹிப்** அவர்களுடையதாகும். இவர்கள் மதிப்பிற்குரிய நிஸாமுதீன் சாஹிப் அவர்களின் மகன் ஆவார்கள். கடந்த நாள்களில் 91 வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

இவர்களுக்கு நான்கு மகன்களும், நான்கு மகள்களும் உள்ளனர். இவர்கள் மிகவும் நல்லியல்பு கொண்டவராக, துணிச்சல் மிக்கவராக, இறைவனுக்கு அஞ்சுபவராக, அனைவருடனும் நன்கு பழகக்கூடியவராக, உறவினர்களோடு நல்ல முறையில் நடந்து கொள்பவராக, கிலாஃபத் மீது பற்றுறுதி கொண்டவராக மற்றும் தியாகம் செய்ய ஆயத்தமாக இருக்கும் சான்றோராக இருந்தார்கள். இவர்களுக்குத் தப்லீகிலும் பெரும் ஆர்வம் இருந்தது.

மூன்றாவது குறிப்பு, கர்த்தார்பூர் சக் உடைய முன்னாள் ஜமாஅத் சத்ர் மர்ஹூம் பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்களின் துணைவியார் **மதிப்பிற்குரிய ஸைனப் பீபீ சாஹிபா** அவர்களுடையதாகும். மர்ஹூமா கடந்த நாள்களில் 85 வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

மர்ஹூமா மூஸியா ஆவார்கள். தஹஜ்ஜுத் தொழக்கூடியவராக, துஆ செய்யக்கூடியவராக மற்றும் திருக்குர்ஆன் திலாவத் செய்யக்கூடியராக இருந்த நல்லியல்புள்ள பெண்மணி ஆவார்கள். இவர்கள் மகள் இயக்கத்தின் முபல்லிகின் துணைவியார் ஆவார்கள். இவர்களால் தம் தாயாருடைய ஜனாஸாவில் கலந்து கொள்ள இயலவில்லை.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் எல்லா மர்ஹூம்களின் பாவமன்னிப்பு மற்றும் உயர்த்தகுதிக்காக துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ

اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ،

عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ

تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: முரப்பி அத்தாவுல் முஃக்னீ)**